O.S.39-2018

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.39/2018

வாதி தரப்பு 1வது சாட்சி வள்ளிக்கண்ணு என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. ஜெயஸ்ரீ, நகல் பிரிவு கண்காணிப்பாளர்/கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க்(பொறுப்பு) என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. வள்ளிக்கண்ணு | வயது | : | 58/23 |
| கணவர் பெயர் | : | சந்திரசேகர் | தாலுகா | : | ஆலங்குடி |
| கிராமம் | : | சேந்தான்குடி | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-15.11.2023

வா.சா.1

**முதல் விசாரணை**

நான் வழக்கின் வாதி. நான் முதல் விசாரணை நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். என்னிடம் படித்து காண்பித்தார்கள். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானது.

1) 12.08.2010 தேதியிட்ட இனாம் செட்டில்மெண்ட்டின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1,

2) 19.10.2018 தேதியிட்ட வீட்டு வரி ரசீது வா.சா.ஆ.2,

3) 23.02.2017 தேதியிட்ட காத்தாயி இறப்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.3,

4) வாரிசுரிமை சான்று அசல் வா.சா.ஆ.4,

5) வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.5,

6) அஞ்சலக ஒப்புகை அட்டைகள்-2 வா.சா.ஆ.6,

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.